**தத்துவஞானிகளின் தந்தை சாக்கிரட்டீஸ்**

தானியேல் புத்தகத்தில் கிரேக்க சாம்ராஜ்ஜியத்தைக் குறித்தும். மாவீரன் அலெக்ஸ்சாந்தரைக் குறித்தும் பிரதானமாக நான்கிடத்தில் படிக்கலாம்.

தானியேல் 2:32-33, 7:6, 8:8, 11:3, ஆகிய பகுதிகளில் சொல்லப்பட்டுள்ளது.

இன்றைய கிறீஸ் நாடே கிரேக்கம் என அன்றழைக்கப்பட்டது. அன்றைய காலத்தில் கிறீசில் வாழ்ந்த சாக்கிரட்டிஸ், பிளாட்டோ, அறிஸ்ரோட்டில், அலெக்ஸ்சாந்தர் ஆகியோரைக் குறித்து சுருக்கமாக படிக்கப்போகிறோம். உலகப்பிரகாரமாக இவர்கள் பிரபல்யமானவர்கள். இவர்களை உலகத்தார் அறிஞர்கள், தத்துவஞானிகள் என்றழைத்து, அவர்கள் கருத்தை மேற்கோள்காட்டி கர்த்தரைவிட பெரியவர்கள் என்று பேசும்போது. நீங்கள் அவ்வாறில்லை கர்த்தரே பெரியவர், அவரே சிருஷ்டிகர் என்று மறுத்துரைப்பதற்கு கட்டாயம் இவை உங்களுக்கு தெரிந்திருக்க வேண்டும். சாக்கிரட்டீஸ் எதென்ஸ் நகரில் கி.மு 469 ல் பிறந்தார். ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து வறுமையோடு வாழ்ந்தார். தகப்பனார் ஓர் சிற்பி, தாயார் மருத்துவச்சி. சிறுவயதிலேயே கேள்வி கேட்கும் பழக்கமுடையவர். இளவயதில் இராணுவத்திலும் இருந்தவர். இவர் கடவுள் மறுப்பு கொள்கையுடையவர். கல்லையும் மண்ணையும் கடவுளாக ஏற்க மறுத்தார். தர்க்க வாதம் செய்து மக்களை விழிப்படைய செய்தார். ஏன் எதற்கு என்ற கேள்வியை கேட்பார். இவருடைய பேச்சை கேட்பதற்காக இவரை சுற்றி எப்போதும் இளைஞர்கள் கூடியிருப்பார்கள். அரசுக்கு எதிராக புரட்சியை உண்டு பண்ணிவிடுவார் என்ற அச்சத்தில் பொய்யான குற்றச்சாட்டுக்களை கூறி வழக்கு தொடுத்தனர். இவருக்கு தீர்ப்பு வழங்க 501 வர் கொண்ட நீதிக்குழு உருவாக்கப்பட்டது. அதில் 220 பேர் மன்னிக்கும் படியும் 281 பேர் மரண தண்டனை வழங்கவும் வாக்களித்தனர். தண்டனையை நிறைவேற்ற விஷம் குடுக்கப்பட்டது. கி.மு 399 ல் அவரது 70 வது வயதில் கொலைசெய்யப்பட்டார். இவருடைய மாணவன் பிளேட்டோவாகும். தத்துவ ஞானிகளுக்கெல்லாம் தந்தை என்று அழைக்கப்பட்டார்.

**கேள்வி**:

சாக்கிரட்டீஸ் ஞானியா?

**பதில்**:

வேதப்புத்தகம் கர்த்தருக்கு பயப்படும் பயமே ஞானத்தின் ஆரம்பம் என்கிறது. சாக்ரட்டீஸ் பிறப்பதற்கு பல நூற்றாண்டுகள் முன் வாழ்ந்த யோபு பூமியையும், அண்டசராசரத்தைக் குறித்து அறிவு பூர்வமான கருத்துக்களை யோபு புத்தகத்தில் படிக்கலாம். அத்தோடு யோபுவின் குடும்ப வாழ்வானது கண்ணியமானதும், சீரானதாகவும் காணப்பட்டது. சிறு வயதில் சாக்கிரட்டிஸ் மட்டுமல்ல இயேசு கிறிஸ்துவும் 12 வயதில் கேள்வி கேட்டார். நாங்களும் கல்லையும் மண்ணையும் கடவுள் என்று சொல்லவில்லை. வேதம் முழுவதும் அதையே சொல்லுகிறது. சிருஷ்டிகரை மட்டும் வணங்கும்படி. மூட நம்பிக்கையோடு வாழும்படி வேதம் சொல்லவில்லை. கர்த்தரே நமக்கு சுய சித்தமாகிய சிந்திக்கும் ஆற்றலை தந்தவர். ஒரு விலங்கைப் போலவோ, சடப்பொருளைப் போல கர்த்தர் உண்டாக்கவில்லை. தானியேல் புத்தகத்தில் 2ம் அதிகாரத்தில் நேபுகாத்நேச்சார் கண்ட கனவையும் அர்த்தத்தையும் யாராலும் சொல்லமுடியவில்லை. அந்த அரண்மனையில் சாக்கிரட்டீஸ் போன்ற அறிவாளிகள் நிறைந்திருந்தார்கள் அவர்கள் ஒருவராலும் கனவையும் அர்த்தத்தையும் சொல்லமுடியவில்லை. ஒருவேளை சாக்கிரட்டீஸ்

அங்கிருந்திருந்தாலும் சொல்லமுடியாமல் போயிருக்கும். ஜீவனுள்ள தேவனை ஆராதிக்கும் தானியேலால் மட்டுமே முடிந்தது. ஆம் பிள்ளைகளே நாமும் தாழ்மையோடு தானியேல் போன்று கர்த்தரின் பாதத்தில் அமர்ந்து அறிவையும் ஆற்றலையும் ஞானத்தையும் பெற்றுக் கொள்வோம். தேவனை மறுதலிக்காது கர்த்தருக்காக எழும்பி பிரகாசிப்போம். உலகம் சொல்லும் தத்துவ ஞானிகளை காட்டில் வேதத்தில் உள்ள சிறந்த பாத்திரங்களான பரிசுத்தவான்களை பார்த்து வாழ்வோம். ஆமென்

மனுஷனை நோக்கி: இதோ, ஆண்டவருக்குப் பயப்படுவதே ஞானம்; பொல்லாப்பை விட்டு விலகுவதே புத்தி என்றார் என்று சொன்னான்.யோபு 28:28

**ஜெபம்**

ஏல் ஒலாம் (சதாகாலமுள்ள தேவன்) நன்றியப்பா. இயேசப்பாவுக்கு பிரியமானதை செய்து அவருக்கு பிள்ளையாயிருப்பதே பாக்கியம். நித்திய சந்தோசத்தை தேடும் பிள்ளைகளாயிருக்க உதவிடுங்கப்பா. ஆமென்